[1986 ஏப்ரல் 28

பெங்களூரில் அக்ரோ யூனிவர்சிட்டியில் இந்தப் பார்த்தீனியத்தை அழிப்பதற்குரிய ஒரு விதை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுபற்றி அரசு அறியுமா? அவற்றைப் பெற்று, தமிழ்நாட்டில் இத்தகைய விஷச் செடிகளை அழிக்க வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்போது நான் குறிப்பிட்டிருக்கிற இந்த முறை மிக மிக எளிமையானது. இது விவசாயிகள் மேற்கொள்வதற்கு மிகவும் வசதியானது. இதன் மூலமாக விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கிறது என்ற தகவல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப்போன்று பெங்களூர் பல்கலைக் கழகத்திலே அந்த விதை இருக்குமானால் அதைப்பற்றிக் கேட்டறிந்து அதைப் பயன் படுத்த அரசு முயற்சி செய்யும்.

திரு. த. பழனி: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே பாலாற்றின் கரைகளில் இரு மருங்கிலும் பாலாற்றுத் தண்ணீர் பாய்கிற இடங்களில் எல்லாம் பார்த்தீனியச் செடிகள் இருக்கின்றன. அவை அனைத்தையும் ஒழிப்பதை விவசாயிகள் செயல்படுத்த முடியவில்லை. ஆகவே ஊராட்சி ஒன்றியங்கள் மற்ற நிர்வாகங்கள் மூலமாக அந்தப் பணியை மேற்கொள்ளச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, விவசாயத் துறை அலுவலர்கள் அதை நிறைவேற்றுவார்கள். அப்படி நிறைவேற்றவில்லை என்ற வகையிலே நிலைமை இருக்குமானால் அரசு உரிய அறிவுரைகளைச் சொல்லி நிறைவேற்றுமாறு கட்டளையிடும்.

திரு. இ. அம்பழகன்: தலைவர் அவர்களே, இந்த பார்த்தீனியச் செடிகளை அழிப்பதற்காக விவசாயிகளுக்கு துறை மூலமாக ஏதாவது நிதியுதவி வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதற்கு நிதியுதவி தேவையில்லை.

பெரியகுளம் பேரிச்சம் ஏரியிலிருந்து குடிநீர் வழங்கல்.

591—(*வினா எண் 5637)—டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம்—தென்கரை பகுதியில் பேரிச்சம் ஏரியில் இருந்து குடிநீர் சரியாக கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

1986 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், அதுபற்றி எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) பெரியகுளம் தென்கரைப் பகுதியில் பேரிச்சம் ஏரியிலிருந்து குடிநீர் போதுமான அளவு கிடைக்கிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரிச்சம் ஏரியிலிருந்து நீர் கிடைப்பதால் பெரியகுளம் வடகரைப் பகுதியில் உள்ள குழாய்களில் தண்ணீர் சரியாக வருவதில்லை. அதனால் அங்கே குடிநீருக்கு மக்கள் அவதிப்படுகிறார்கள். ஏற்கனவே இரண்டு முறைகள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்து பார்வையிட்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். அதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதற்கு உரிய கட்டணத்தை நகராட்சி கட்டவேண்டும். நகராட்சி அதைக் கட்டியதற்குப் பிறகு அங்கே வடகரைப் பகுதியில் தண்ணீர் வழங்குவதற்கு வழிசெய்ய இயலும். இரண்டு முறையும் அந்தக் கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்கள். உரிய நடவடிக்கை அரசு எடுக்கத் தயாராக இருக்கிறது. ஆகவே நகராட்சி தான் முன்வரவேண்டும்.

டாக்டர் த. முகமது சலீம் : தலைவர் அவர்களே, ஏறக் குறைய 100 ஆண்டுகள் ஆகியும் பெரியகுளம் நகராட்சியில் போதுமான வருமானம் இல்லாத காரணத்தினால் அமைச்சர் அவர்கள் அதற்கு விதிவிலக்குக் கொடுத்து சீக்கிரமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, போதிய வருமானம் இல்லை என்பது தெரிகிறது. வருமானத்தை அதிகப்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது முயற்சிகளை மேற்கொண்டால் நல்லது.

பூச்சிகொல்லி மருந்துகள் வழங்கல்.

592-*வினா எண் 7417—திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு பூச்சிக்கொல்லி மருந்து இலவசமாக கொடுக்கும் திட்டம் ஏதும் உள்ளதா ?